# இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபை-2010

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப் பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபையானது 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்குப் பதிவேடுகளைப் பேணியிருந்ததுடன் இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபையின் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைவரத்தையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் செயற்பாட்டின் நிதிசார் விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் பிரதிபலிக்கும் வகையில் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

### 1.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு பணிக்கொடைக்கான ஏற்பாடு ரூபா 90,045 வினால் குறைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| தொடர்பு | இணங்காமை |
| --- | --- |
| (அ) நிதிப்பிரமாணம் 261(3) | 2010 பெப்ரவரி மாதத்தின் போது காசேட்டு மீதியினை விஞ்சி ரூபா 338,341 பெறுமதியான காசோலைகள் வழங்கப்பட்டிருந்தன. |

(ஆ) 2003 யூன் 02 ஆந் திகதிய பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 12 ஆம் இலக்கத்தினுாடாக சுட்டிக்காட்டப்பட்ட உள்ளகக் கட்டுப்பாடு சம்பந்தமான பொது முயற்சிகள் வழிகாட்டல் கைநூல்.

| | | |
|---|---|---|
| (i) | 5 ஆவது அத்தியாயத்தின் 5.1 மற்றும் 5.12 ஆம் பந்திகள் | முடிவடையும் கால எல்லை குறிப்பிடப்படாத கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருந்ததுடன் நிறுவனத்திற்குச் சொந்தமான நடைமுறையிலுள்ள சொத்துக்கள், அமைப்புக்களின் செயற்பாடுகள், கடந்த 03 வருடங்களின் செயற்பாட்டு மீளாய்வுகள், திட்டமிடப்பட்ட கால எல்லைக்குரிய நிறுவனத்தின் நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அடைவதற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு மற்றும் தீர்மானிக்கப்பட்ட செயலாற்றல் நிர்ணயிப்புக்கள் இங்கே குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | 07 ஆவது அத்தியாயத்தின் 7.4.5 ஆம் உபபந்தி | முன்னைய வருடங்களைப் போன்று 2010 ஆம் ஆண்டிற்காகவும் சபைக்குச் சொந்தமான நிலையான சொத்துக்கள் மற்றும் களஞ்சியங்களை பரீட்சித்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக சபையினால் மெய்மையாய்வுச் சபையொன்று நியமிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2 நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

---------------------------------------------------------------

### 2.1 நிதிசார் செயலாற்றல்

-----------------------------

சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய வருடத்திற்கான நிதிசார் விளைவுகள் சம்பந்தமான பொழிப்பொன்று கீழே காண்பிக்கப்படுகின்றது.

| விடயம் | மீளாய்வாண்டு | முன்னைய ஆண்டு | முன்னைய ஆண்டுடன் இணக்கஞ் செய்த போது சாதகம் (பாதகம்) சதவீதத்தில் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | % |
| அரச மானியம் | 31,508,960 | 22,727,524 | 38.64 |
| மொத்த மீண்டெழும் செலவினம் வரி தவிர்த்து | 29,756,776 | 24,051,645 | (23.72) |

## 2.2 செயற்பாட்டு மீளாய்வு

### 2.2.1 செயலாற்றல்

(அ) குறித்தொதுக்காத வியாபார முயற்சிகளின் (எஸ்பீஈ) நிதிக்கூற்றுக்களை மீளாய்வு செய்த போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) நிதிக் கூற்றுக்களை மீளாய்வு செய்வது சபையின் பிரதான செயற்பாடாக இருந்த போதிலும் தற்போது நடாத்திச் செல்லப்படுகின்ற குறித்தொதுக்காத வியாபார முயற்சியாளர்களின் அளவினை அல்லது அதன் தகவல்களை நாளதுவரையாக்குவதற்கான முறைமைகளை உருவாக்குதற்கு சபையினால் இது வரையிலும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) இனங்காணப்பட்ட குறித்தொதுக்காத வியாபார முயற்சியாளர்களை வருடாந்த மீளாய்விற்கு உட்படுத்தி பெறப்பட்ட நிதிக்கூற்றுக்கள் 20% இற்கு குறைவான மட்டத்திலேயே காணப்படுகின்றது.

(iii) மீளாய்விற்கு உட்படுத்தப்படுகின்ற உரிய நிதிக்கூற்றுக்களுக்கிடையே மிகச்சிறப்பு வாய்ந்த/ முக்கியமான (significant) அவதானிப்புக்களுடன் கூடிய இரண்டு நிதிக் கூற்றுக்கள் மாத்திரம் மீளாய்வாண்டின் போது அடையாளம் காணப்பட்டிருந்தன.

(ஆ) 2010 ஆம் ஆண்டு மற்றும் 2009 ஆம் வருடங்களுக்கான நிதிக்கூற்றுக்களை மீளாய்வு செய்தல் நிலைமை முன்னைய வருடத்துடன் ஒப்பீடு செய்து கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | 2010 | 2009 |
|---|---|---|
| சனவரி 1 இல் உள்ளவாறு மீளாய்வு செய்ய வேண்டிய/ பூர்த்தியாக்கப்பட வேண்டிய வருடாந்த அறிக்கைகளின் எண்ணிக்கை | 802 | 775 |
| ஆண்டின் போது கிடைக்கப் பெற்ற வருடாந்த அறிக்கைகளின் எண்ணிக்கை (முன்னைய வருடத்தில் கிடைத்த அறிக்கைகள் தவிர) | 1109 | 937 |
| | 1911 | 1712 |
| குறித்தொதுக்காத வியாபார முயற்சிகளில் கிடைக்கப்பெறாத வருடாந்த அறிக்கைகளின் எண்ணிக்கை | (27) | (6) |
| காலம் கடந்த வருடாந்த அறிக்கைகளின் எண்ணிக்கை | (735) | (738) |
| ஒரு வருடாந்த அறிக்கை இரண்டுமுறை கிடைத்தவை | (13) | (10) |
| | 1136 | 958 |
| மீளாய்வு பூர்த்தி செய்யப்பட்ட வருடாந்த அறிக்கைகளின் எண்ணிக்கை | (211) | (156) |
| திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீளாய்வு செய்ய வேண்டிய / பூர்த்தியாக்க வேண்டிய வருடாந்த அறிக்கைகளின் எண்ணிக்கை | 925 | 802 |

‘‘வரலாற்று அடிப்படையிலன்றி தெரிவின் அடிப்படையில் மீளாய்விற்காக தெரிவு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்கள் இக் கூற்றில் காணப்படுகின்றமையினால் இக் கூற்றுக்கள் மேலும்

பொருத்தமற்றிருந்ததாக'' பணிப்பாளர் நாயகத்தினால் எனக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

(இ) நிதிக்கூற்றுக்களை மீளாய்வு செய்வதற்காக உயர் சம்பளமொன்று செலுத்தி விஷேட தகைமைகளையுடைய உத்தியோகத்தர்கள் தொழில்நுட்ப முகாமைத்தவ பதவிகளுக்காக ஆட்சேர்க்கப்பட்டிருந்ததுடன், இவர்களிடையே ஒரு உத்தியோகத்தருக்கு சபையின் நிதி மற்றும் நிர்வாக நடவடிக்கைகள் சம்பந்தமான பொறுப்புக்கள் கையளிக்கப்பட்டிருந்தது.

" சபையின் வருமானம் அரச மானியத்தினை மாத்திரம் கொண்டுள்ளமையினாலும் மீண்டெழும் செலவினம் ரூபா 30 மில்லியன் மட்டிலாக இருந்தமையினாலும் முழுமையான நிதி மற்றும் நிர்வாகத்திற்கென ஒரு முகாமையாளர் நியமிக்கப்படுவது பொருத்தமற்றது'' என பணிப்பாளர் நாயகத்தினால் எனக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

## 2.2.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

2010 ஆம் ஆண்டின் போது சில உத்தியோகத்தர்கள் 07 சந்தர்ப்பங்களில் வெளிநாட்டுப் பிரயாணங்களில் ஈடுபட்டிருந்ததுடன் சபையினால் அதற்காக ரூபா 1,893,393 தொகை செலவு செய்யப்பட்டிருந்தது. இது சம்பந்தமாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையின் பணிப்பாளர் நாயகம் மற்றும் தொழில்நுட்ப அலுவலர்கள் மாத்திரம் வெளிநாட்டுப் பிரயாணத்திற்காக ஈடுபட்டிருந்தனர். இவ் வெளிநாட்டு சுற்றுப் பிரயாணத்திற்குரிய இலத்திரனியல் தபால் மூலம் பெறப்பட்ட தகவல்கள் போன்ற முறையான அழைப்பாணைகள் மற்றும் சுற்றுப் பிரயாணங்களின் விபரமான தகவல்களோ சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. சுற்றுப்பிரயாணத்திற்கான அனுசரணை வழங்கும் தரப்பினரால் மேற்கொள்ளப்படுகின்ற அல்லது மீளளிப்புச் செய்து பெறக்கூடிய செலவினங்களோ அல்லது அவை என்ன நடக்குகின்றது என்பதற்கான சான்றுகளோ கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

“நிகழ்காலத்தில் சர்வதேச நிறுவனங்கள் யாவற்றினதும் தொடர்பாடல் செயற்பாடுகள் இலத்திரனியல் முறைமை வரை அபிவிருத்தியடைந்து காணப்படுகின்றமையினாலும் முழுமையாக இலத்திரனியல் உபயோகித்திருப்பதாலும் அது தொடர்பான கடித விபரங்களை எதிர்பார்ப்பது பொருத்தமற்றது” என பணிப்பாளர் நாயகத்தினால் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான சான்றுகள் எதுவும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2009 செப்தெம்பர் 01 ஆந் திகதி தொடக்கம் ஒப்பந்த அடிப்படையில் சேவையில் அமர்த்தப்பட்ட இரண்டு உத்தியோகத்தர்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் XV ஆவது அத்தியாயத்தின் 3.2 ஆம் பிரிவிற்கு முரணாக 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் வெளிநாட்டுச் சுற்றுப் பிரயாணங்களுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

### 2.2.3 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

மாதாந்தம் ரூபா 372,375 தொகையான (க.அ. 4965 X ரூபா 75) வாடகை மற்றும் ரூபா 15,000 தொகையான உயர் சேவையின் கீழான சேவைக்கட்டணமும் செலுத்தப்பட்டு வெளிநபர்களுக்குச் சொந்தமான கட்டடமொன்று சபையினால் பராமரிக்கப்பட்டிருந்தது. 10 பேர் உள்ளடங்கிய அலுவலக பதவியினருக்காக மீளாய்வாண்டிற்குரிய வாடகை மற்றும் சேவைக்கட்டணங்கள் (பெறுமதி சேர் வரி மற்றும் தேசத்தெக்கட்டியெழு ப்புவதற்கான வரி சேர்த்து) கூட்டுத்தொகை முறையே ரூபா. 5,154,862 தொகை மற்றும் ரூபா. 137,169 தொகையான நிதி செலவு செய்யப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் ஒரு ஊழியருக்காக வாடகை மற்றும் சேவைக் கட்டணங்களாக வருடத்திற்கு ரூபா 529,202 தொகையானது சபையினால் செலவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் பொருளாதார மயப்படுத்தலுக்குச் சாதகமான மாற்று நிலையமொன்றைத் தெரிவுசெய்வதற்கு சபை கவனம் செலுத்தியிருக்கவில்லை.

### 2.2.4 பதவியினருக்கான கிரயம் - பணிக்கொடை கொடுப்பனவு

பணிப்பாளர் நாயகம் மற்றும் சிரேஷ்ட தொழில்நுட்ப முகாமைத்துவ சபைக்கு ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்டிருந்ததுடன், அவர்கள் சேர்க்கப்பட்ட தினத்திலிருந்து பணிக்கொடைக்காக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது பணிப்பாளர் நாயகம் மற்றும் சிரேஷ்ட தொழில்நுட்ப முகாமையாளர்களுக்காக முறையே ரூபா 1,583,333 தொகையும் ரூபா 735,000 தொகையும் மீளாய்வாண்டின் இறுதியில் ஊழியர் பணிக் கொடைக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும் உரிய உத்தியோகத்தர்களின் பணிக்கொடைக் கொடுப்பன ஒதுக்கத்திற்காக நிதிஏற்பாடுகள் மேற்கொளள்ப்பட்டிருக்கவில்லை.

‘‘ஒப்பந்த அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தியதன் காரணமாக ஊழியர் பணிக்கொடைக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்ட வேண்டியதாக மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் தீர்வு செய்யப்பட்ட வழக்குத் தீர்ப்பு காணப்படுவதாக’’ பணிப்பாளர் நாயகத்தினால் எனக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் இவ் ஒப்பந்த பதவிகளைத் தோற்றுவித்தல் மற்றும் பணிக்கொடை ஏற்பாடு செய்யப்பட்டமைக்குரிய சான்றுகள் எதுவும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) காசு மற்றும் நிதி
(ஆ) பொருள் மெய்மையாய்வு
(இ) உள்ளகக் கணக்காய்வு
(ஈ) கூட்டிணைந்த திட்டம் மற்றும் செயல் நடவடிக்கைத் திட்டம்